கனம் சபாநாயகர்: திவிர திட்டம் என்பதற்காக இதையெல்லாம் விளக்க வேண்டியதில்லை.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, தீண்டாமைச் சட்டம் வந்ததற்குப் பின்னாலே கூட இன்னும் நம் நாட்டிலே தாழ்த்தப்பட்டவர்கள் மேலே துண்டு போட்டுச் செல்ல முடியாது, கோயிலுக்குச் செல்ல முடியாது என்ற நிலை இருக்கிறதே, இதற்குக் காரணம் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளா? அல்லது அந்தச் சட்டத்தை நல்ல முறையில செயலாற்றுவதில் அரசாங்கம் தயக்கம் காட்டுவதா? இதைப்பற்றி அரசாங்கம் ஆலோசித்ததா? அதன் முடிவு என்ன?

கனம் திரு. பூ. கக்கன்: சமூகத்தில் இருக்கும் அநீதியை அகற்ற அரசாங்கம் அக்கறை எடுத்து வருகிறது. இந்த அநீதி பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக இருந்து வருவதால் அதை உடனடியாக நீக்கிவிட முடியாது என்று எல்லோருக்கும் தெரியும். இருந்தாலும் வெகு துரிதமாக அகற்றிக் காட்ட வேண்டுமென்று அரசாங்கம் பாடுபட்டு வருகிறது. நகரங்களை எடுத்துக் கொண்டாலும், தாலூகா நகரங்களை எடுத்துக்கொண்டாலும் இந்த மாதிரி பேச்சே கிடையாது. சில குக்கிராமங்களில்தான் மனமாற்றம் வராமல் இருக்கிறது. அந்த இடங்களில் அதிகாரிகளைக் கொண்டும், ஹரிஜன நலப் பணிகளில் ஈடுபட்டிருக்கிறவர்களைக் கொண்டும் அவர்களுக்கு மனமாற்றம் ஏற்படவேண்டும் என்ற முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, போடப்பட்ட வழக்குகளில் இருந்து எந்த வகையில் இந்தத் தீண்டாமை கையாளப்பட்டு வருகிறது என்று அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: அப்போதைக்கப்போது கேஸ் எடுக்கும் போது எஃபெட் இருக்கிறது.

MR. SPEAKER: To give the details of the case, the Hon. Minister has to look into the file and that will take time. We have got only five more minutes to dispose of the remaining questions.

குடிநீர் திட்டம் (உடையார்பாளையம் வட்டம்)

*564 கேள்வி.—திரு. இரா. நாராயணன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் வட்டம் செந்துறை பகுதியில் குடிதண்ணீர் திட்டத்திற்காக மாவட்டக் கமிட்டியில் எஸ்டிமேட்டுகள் தயார் செய்ய தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டதா?

20th July 1964]

(இ) ஆமெனில், இத்திட்டத்தை ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க உத்தேசமுண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. இரா. நாராயணன்: தலைவர் அவர்களே, இந்தக் குடி தண்ணீர் வசதி அந்தப் பகுதியிலே இல்லாத காரணத்தினால் நரம்புச் சிலந்தி என்ற வியாதி ஏற்பட்டு அதிகக் கஷ்டமாக இருக்கிறது. அதை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்ப்பதற்குத் தவறி விட்ட காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கலாமா வேண்டாமா என்பதைப் பற்றி டெவலப்மெண்ட் கவுன்சில் மூலமாகச் சிபாரிசு செய்து அனுப்பியிருந்தார்கள். ஏற்கெனவே பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர்த் திட்டம் ஸாங்ஷன் ஆன இடங்களில் கூட தற்போது அவைகள் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. செந்துறை பஞ்சாயத்தைப் பொறுத்த வரையில் திருச்சி கலெக்டருக்கு அரசாங்கம் எழுதி அவர்களுடைய ரிப்போர்ட்டை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. அவரும் பப்ளிக் ஹெல்த் என்ஜினியரோடு கலந்து பேசிய பிறகு எஸ்டிமேட் அனுப்புவதாகக் கூறியிருக்கிறார். எஸ்டிமேட்டைப் பார்க்கும்போது அதை உடனடியாக எடுத்துச் செய்வதற்கு இயலாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தொழிற்பேட்டை

*565 கேள்வி.—திரு. வி. ஆர். பெரியண்ணன்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சேலத்தில் தொழிற்பேட்டை ஒன்றை நிறுவும் திட்டம் இப்போது எந்த நிலையில் உள்ளது?

THE HON. SRI R. VENKATARAMAN: A total extent of 26.56 acres of land in Narasojipatti and Reddiyur villages required for establishing the Industrial Colony at Salem has been notified under the Land Acquisition Act. But possession of 19.72 acres of lands has not been taken by the Government as the owners of the lands have filed writ petitions in the High Court challenging the validity of the acquisition proceedings taken by Government.

திரு. எம். வி. கரிவேங்கடம்: தலைவர் அவர்களே, அந்த இடத்திலே அந்த அக்விஸிஷன் ப்ரொஸீடிங்சை ஆட்சேபித்து ரிட் மனு தாக்கல் செய்திருப்பதாகச் சொன்னார்கள். வேறு இடத்தில் இதை அமைக்க வேறு இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கே அமைப்பதற்கு வேலையை துரிதப்படுத்துவார்களா?